
அத்தனைக்கும் ஆசைப்படு!
தொடர் எழுதும் சத்குருவின்
பிற படைப்புகள்
அனைத்து முன்னணி கடைகளிலும் கிடைக்கும்
ஞானியின் சந்நிதியில்
“கடவுள் இருக்கிறாரா?” “மறுபிறவி,” “கனவுகள்” போன்ற பல துறைகள் சார்ந்த கேள்விகளுக்கு தன்னை உணர்ந்த ஞானியான சத்குரு அவர்களின் தெளிவான விளக்கங்கள். தெளிந்த ஞானத்தின் சாரல் நனைய இது ஒரு வாய்ப்பு.
தியானலிங்கம் - மெய்ஞானத்தின் விஞ்ஞானம்
எந்த மதத்தையும் சாராத யோக அறிவியலின் வெளிப்பாடு
உயிரென்னும் பூ மலரும்
சத்குரு அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை உணர்த்திடும் அரிய புத்தகம்.
Mystics Musings
A book for the thirsty and a glimpse of an oasis for someone willing to rise above the intellect and move towards knowing through the wisdom of an enlightened master.
Audio & Video CD's
ஞானியின் சந்நிதியில் (Vol.1 to 5)
Inner Management
Sexuality and the Divine
Why Suffering ?
From Creation to Creator
Women in Spirituality
A Guru always Takes you for a Ride
and many more.
Isha Yoga Center, Velliangiri Foothills, Semmedu (P.O.), Coimbatore - 641 114, ✆ 94433 51297, 94444 04703 email : ioi@ishafoundation.org website : www.ishafoundation.org

Isha

# அத்தனைக்கும் ஆசைப்படு!

**மனவளம்**

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

**எல்லோரிடமும் ஒரே தெய்விகம் குடிகொண்டு இருக்கையில், எப்படி ஒருவரை விரும்பவும், இன்னொருவரை வெறுக்கவும் முடியும்?**

**"'ஆசை கொள்ளாதே!' என்று புத்தர் சொன்னார். ஆனால், நீங்களோ 'அத்தனைக்கும் ஆசைப்படு' என்று சொல்கிறீர்கள்! ஏன் இந்த முரண்பாடு?" என்று என்னிடம் பலர் கேட்கிறார்கள்.**

**தன் வாழ்நாளில் அத்தனை மனிதர்களுக்கும் ஞானம் கொடுத்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்ட புத்தரா, மற்றவர்களை ஆசைப்பட வேண்டாம் என்று சொல்லி இருப்பார்? ஒருக்காலும் இருக்காது!**

**உங்கள் ஆசைகள் மிகப் பெரிதாகவே இருந்துவிட்டுப் போகட்டும். அவற்றை அடைய நீங்கள் நூறு சதவிகித ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். கவனத்துடன் ஆசையைக் கையாண்டால், நினைத்ததைச் சாதிக்கலாம்!**



ஆசை என்பது துன்பமில்லை. அதைப் பற்றிய அறியாமைதான் துன்பம். இதைப் புரிந்துகொள்ளாமல், அந்த ஆசையை ஒரு வியாபாரத்தின் மீதோ, மண்ணின் மீதோ, அடுத்தவர் மீதோ, ஆன்மிகத்தின் மீதோ, அதிகாரத்தின் மீதோ அடையாளப்படுத்திப் பார்த்தால் நிறைவு வராது. அதிருப்திதான் மிஞ்சும்.

இந்த அறியாமையை எப்படிக் களைவது?

முறையான யோகாவின் மூலம் குறுகிய எல்லைகளை உடைக்க முடியும். பேரானந்தத்தை ருசித்துப் பார்க்க முடியும். உங்கள் உச்சபட்ச சக்தியை உயிர்ப்பித்துவிட்டால், அப்புறம் வியாபாரமோ, குடும்பமோ, ஆன்மிகமோ எதை வேண்டுமானாலும் உள்காயம் இல்லாமல் முழுமையாக விளையாடிப் பார்க்க முடியும்.

உள்ளுணர்வில் இந்த அனுபவம்

கிடைக்கும் வரை, வெளியிலிருந்து சேகரித்த திறமைகளை மட்டுமே வைத்து விளையாட முடியும்.

ஆசைப்பட்டதில், உங்கள் திறமைக்கேற்றவைதான் கிடைக்கும். ஆனால், ஆசையோடு நீங்கள் செயலாற்றத் துவங்கிவிட்டால், அதுவே உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு தரும். தோற்றாலும் துன்பம் வராது. கிடைத்த ஆயிரம் விஷயத்தை மறந்து விட்டு, கிடைக்காத ஏதோ ஒரு விஷயத்துக்காகத் தற்கொலை செய்து கொள்வது போன்ற முட்டாள்தனமான எண்ணங்கள் ஒருபோதும் உங்களை நெருங்காது.

எல்லோருக்கும் ஒரே அளவு பணமோ, பதவியோ, அதிகாரமோ, வசதியோ கிடைப்பது வேண்டுமானால் சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் உள்ளுணர்வில் ஒரே அளவு ஆனந்தம் கிடைப்பதை யார் தடுக்க முடியும்?

ஆசையின் அடிப்படை புரியாதவர்கள்தான் இந்த வியாபாரம் வேண்டும், இந்த வீடு வேண்டும், இந்தப் பெண் வேண்டும் என்று குறுகிய வட்டத்துக்குள் அடங்கிப் போகும் அற்ப ஆசைகளை வளர்த்துக்கொள்வார்கள்.

அப்படி, ஏதோ குறிப்பிட்ட ஒன்றுக்கு மட்டும் ஆசைப்படாமல், அத்தனைக்கும் ஆசைப்பட வேண்டுமென்றால், அதை முழுமையான கவனத்துடன் மட்டும்தான் செய்ய வேண்டும். அப்படி முழுமையான கவனத்துடன் வாழத் துவங்கி விட்டீர்கள் என்றால், எதையும் உங்களுடையது என்று சொந்தம் கொண்டாடுவதை விட்டுவிட்டு, எல்லாமே நீங்கள்தான் என்று உணர்ந்துகொள்ள முடியும்.

அதனால்தான், அத்தனைக்கும் உங்களை ஆசைப்படச் சொன்னேன். கவனத்துடன் அத்தனைக்கும்


## ஈஷா யோக மையம்

சத்குரு ஜக்கி வாசுதேவ் நிறுவிய 'ஈஷா யோக மையம்' கோவை, வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் செயல்படுகிறது.

மதங்களுக்கு அப்பாற்பட்ட தியான லிங்கம் என்னும் மிகச் சக்தி வாய்ந்த சன்னிதியை இங்கே சத்குரு எழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான ஊர்களிலும், மற்ற மாநிலங்களில் பெரிய நகரங்களிலும் ஈஷா யோக வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

முகவரி: ஈஷா யோக மையம், வெள்ளியங்கிரி மலைச்சாரல், கோவை. 641114.

இணையதளம்: www.isha foundation.org.

மின்னஞ்சல்: yogacenter@ishafoundation.org. தொலைபேசி: 9841675578, 9841915929




# சிலிர்ப்பான அனுபவம்!

சத்குரு ஜக்கி வாசுதேவ், எந்தக் குறிப்பிட்ட மதத்துடனும் கலாசாரத்துடனும் தன்னைப் பிணைத்துக்கொள்ளாதவர்.

அவருடைய யோக வகுப்புகளில் எங்களுக்குக் கிடைத்த அற்புத அனுபவம், எங்களுள் பல அற்புத மாற்றங்களை நிகழ்த்தியது. இறுக்கமாக மூடியிருந்த பல மனக் கதவுகளைத் திறந்து விட்டது. இந்த பூமியில் நாம் சும்மா வசிக்க வரவில்லை, வாழ வந்திருக்கிறோம் என்பதை உணர்த்தியது.



அதற்கு முன் கடினமாகத் தோன்றிய பல வேலைகள் எளிதாகிப்போயின. எதைச் செய்தாலும் ஆசையுடன் செய்யக் கற்ற பின், வாழ்க்கையின் வேதனைகள் குறைந்தன.

விகடனுக்காக பிரத்யேகமாக சத்குருவை நாங்கள் சந்தித்த தருணங்களில், தயார் செய்து கொண்டு போயிருந்த பல கேள்விகளைக் கேட்டோம். எந்தக் கேள்வியானாலும், கேட்டு முடித்த அடுத்த கணம் அதற்கான பதிலைத் தெளிவாகத் தருவார் சத்குரு.

ஆசை பற்றியும், வெற்றி பற்றியும், கடவுள் பற்றியும், மத நம்பிக்கைகள் பற்றியும் அவர் கூறிய பல கருத்துக்கள் ஆணித் தரமானவை. நமக்குள் ஆழமாக இறங்குபவை.

தமது கருத்துக்களை பாமரர்களுக்கும் விளங்கும்படி, சரளமான வார்த்தைகளில் சொல்வதில் சத்குரு வல்லவர். அவருடைய ஆங்கிலம், அருவி போல் தடை இன்றிப் பொழியும். அவருடைய தமிழ், பாறைகளில் அருவி தத்திச் செல்வதுபோல் ரசிக்கத்தக்க மழலையாக மலரும்.

சத்குருவோடு ஆங்கிலத்தில் உரையாடி, அவரது வார்த்தைகளை மீண்டும் சுவைத்து, ருசித்து, அவற்றை இத்தனை வாரமாக உங்களோடு தமிழில் பகிர்ந்துகொண்டது எங்களுக்குக் கிடைத்த ஓர் இனிமையான, சிலிர்ப்பான அனுபவம்!

அன்புடன்,
**சுபா**

ஆசைப்பட்டால், உங்கள் வாழ்க்கையைப் பூரணமாக உங்கள் விருப்பப்படி அமைத்துக்கொள்ள முடியும்!

ஆசை விரிவடைந்து விரிவடைந்து பிரபஞ்சத்தையே உள்ளடக்கிக் கொள்ளும் தருணம் வந்ததும், பேரானந்தத்தை நீங்கள் ருசிக்க முடியும்.

புத்தருக்குக் கிடைத்த ஞானம், எனக்குக் கிடைத்த ஆனந்தம் இங்கே இருக்கும் ஒவ்வொருவருக்குமே சாத்தியம்!

எனவே, அத்தனைக்கும் ஆசைப்படுங்கள்!

ஆசிகளுடன்,
Love & Grace